மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.

முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ஆம் நாள் திங்கட்கிழமை

I.A.No. 2/2021 In O.S.No.209/2016

1) பாக்கியராஜ்

2) பெரிய பொம்மா நாயக்கர்(இறப்பு) ..... மனுதாரர் / வாதி

/எதிர்/

1) பொம்மக்காள்

2) சின்னக்காள்

3) சின்னம்மாள்

4) சின்னகுஞ்சு

5) அப்பா நாயக்கர்

6) பொம்மா நாயக்கர்

7) தமிழ்நாடு அரசு சார்பாக அதன் பிரதிநிதி மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்

8) மாவட்ட வருவாய் அலுவலர், கரூர்

9) வருவாய் கோட்ட அலுவலர், குளித்தலை

10) வட்டாட்சியர் , குளித்தலை .....எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 10.02.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 1, 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.RM.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று 14.02.2022 ம் தேதி இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

ஆணையுரை

மனுவில் கண்டபடி அசல் வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் /வாதி தரப்பு மனுவின் சுருக்கம்

1. மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி மற்றும் 2ம் வாதி மூத்த தந்தைவழி மாமா ஆவார். தாவா சொத்துக்கள் 2ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டு, 05.10.2012ம் வருடம் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார். கிரைய தேதி முதல் தாவா சொத்துக்கள் 1ம் வாதியின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வருகிறது. தாவா சொத்துக்களில் உரிமை இல்லாத பிரதிவாதிகள் வாதிகளை தாவா சொத்துக்களில் இருந்து வெளியேற்ற முயற்சித்தனர். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் வாதி இறந்துவிட்டார். அதைப்பொறுத்து வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 5 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்

2. மனுதாரரின் மனு சரியல்ல. தாவா சொத்திற்கு 2ம் வாதி உண்மையான உரிமையாளர் அல்ல, ஆள்மாறாட்டம் செய்து தாவா சொத்தை 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி கிரையம் போலியானதும் வாதிகளின் கூட்டுச்சதி என்றும் வருவாய் கோட்ட அலுவலர், குளித்தலை மற்றும் வட்டாட்சியர், குளித்தலை ஆகியோர்கள் வாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை இரத்து செய்துள்ளனர். வாதிகள் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே வாதிகளுக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) 13057/2016 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் வாதியின் வாரிசுகள் வழக்கிற்கு தேவையான நபர்கள் அவர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டும். 2ம் வாதி 1ம் வாதிக்கு மூத்த தந்தைவழி மாமா என்பதும், அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை 05.10.2012ம் தேதியில் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதும், வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்பதும் பொய். தாவா சொத்துக்களில் இருந்து 1ம் வாதியை வெளியேற்ற வேண்டிய அவசியம் இந்த எதிர்மனுதாரர்களுக்கு இல்லை. தாவா சொத்து எதிர்மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ளது. 2ம் வாதியின் வாரிசுகளை சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்பதால் வாதி ஏற்கனவே அவர்களை ஏமாற்றி இருக்கலாம் அதன்காரணமாக தான் 2ம் வாதியின் வாரிசுகளை தவிர்த்து வருகிறார். எனவே மனுதாரரின் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், 2ம் வாதி 21.08.2020ம் தேதியில் இறந்துவிட்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதால் அதைப்பொறுத்து வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமென மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்டது. தாவா சொத்து 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதல்ல, இறந்துபோன 2ம் வாதியின் வாரிசுகள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் எனவும் தாவா சொத்து எதிர்மனுதாரர்களின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது.

6. பொதுவாக ஒரு வழக்கில் சாட்சி விசாரணை தொடங்குவதற்கு முன்பு எந்த நிலையிலும் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம் என்றும் அசல் வழக்கில் சாட்சி விசாரணை தொடங்கப்பட்ட பின்பு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாமல் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்கமுடியாது என உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17ல் கூறப்பட்டுள்ளது. 2ம் வாதியின் வாரிசுகள் வழக்கிற்கு தேவையான நபர்கள் அவர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது குறித்து வாதி தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. எனினும் இம்மனுவை அனுமதிப்பது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பதாலும் நீதியின் நலன் கருதி மனுதாரரின் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக,

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P BALA MURUGAN

Digitally signed by P BALA MURUGAN
DN: cn=P BALA MURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.03.08 19:41:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

குளித்தலை.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி	-	இல்லை
மனுதாரர்/வாதிதரப்பு சான்றாவணங்கள்	-	இல்லை
எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்தரப்பு சாட்சி	-	இல்லை
எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்	-	இல்லை

P BALA MURUGAN

Digitally signed by P BALA MURUGAN
DN: cn=P BALA MURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.03.08 19:41:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

குளித்தலை.